**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl.Sessions Case No. | : | 11/2023 (Mother case SC.No. 17/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-26** |
| | | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : கார்த்திக் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 25th day of March 2025.

**(எதிரி பிரேம்குமார் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் சின்னாண்டாங்கோவிலில் வசித்து வந்து, கூலி வேலை செய்கிறேன். சாட்சி பிரவீன்குமாரை எனக்கு தெரியும். பிரவீன்குமார் என்பவர் என் வீட்டிற்கு பக்கத்தில் வசித்து வருகிறார். 2020 ம் வருடம் ஒருநாள் இரவு நான் வீட்டிலிருந்தபோது, பிரவீன்குமார் என் வீட்டிற்கு வந்து, அவரது இளநீர் கடை திறந்திருக்கிறதா, அல்லது பூட்டியிருக்கிறதா என்று பார்க்கவேண்டும் என்று சொல்லி என்னை அழைத்தார். நானும், அவரும் இருசக்கர வாகனத்தில் இரவு சுமார் 10.30 மணியளவில் பைபாஸ் ரோட்டில் உள்ள டான்சி கடைக்கு அருகில் உள்ள இளநீர் கடைக்கு சென்று பார்த்துவிட்டு, அண்ணாநகர் வழியாக வீட்டிற்கு வந்துக்கொண்டிருந்தோம். அப்போது, அண்ணாநகர் பிள்ளையார் கோவில் அருகில் கும்பலாக பத்துபேர் நின்றுக்கொண்டிருந்தார்கள். கோகுல், பாண்டி, அஜீத், பிரேம்குமார் மற்றும்

நிறையபேர் நின்றுக்கொண்டிருந்தார்கள். மேற்சொன்ன பிரேம்குமார் என்பவர் ஆஜரில் உள்ள எதிரி. அப்போது அவர்கள் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் இருசக்கர வாகனத்தில் சென்றோம். அவனை வெட்ட வேண்டும், கொல்ல வேண்டும் என்று அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். நாங்கள் இருவரும் அதை காதில் கேட்டுக்கொண்டே, இருசக்கர வாகனத்தில் சென்றோம். மறுநாள் காலையில் பிரவீன்குமார் எனக்கு போன் செய்து, அவரது அண்ணன் கிருஷ்ணமூர்த்தியை வெட்டிவிட்டார்கள் என்று சொன்னார். அதன்பிறகு, நான் அப்பல்லோ மருத்துவமனைக்கு சென்றேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை ஒருமுறை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், அவரது மூத்த வழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராகியுள்ளதால், குறுக்கு விசாரணைக்கு கால அவகாசம் கோரினார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி வழக்கறிஞர் வேறு நீதிமன்றத்தில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கு போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

Spl.Sessions Case No. : 11/2023 (Mother case SC.No. 17/2021)

Deposition of witness for : Prosecution - **PW-27**

Defense

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரகாஷ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 25th day of March 2025.

**(எதிரி பிரேம்குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரவக்குறிச்சி வட்டம், ஆரியூர் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 22.09.2020 அன்று கரூர் வட்டம், லெட்சுமிநாராயணசமுத்திரம் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வந்தேன். அப்போது எனது உதவியாளராக சாட்சி சுலோச்சனா பணியாற்றினார். அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு நான் பணியிலிருந்தபோது, கரூர் நகர காவல் ஆய்வாளர் போன் மூலமாக என்னை காவல்நிலையத்திற்கு கு.எண். 1031/2020 வழக்கில் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க தயாராக இருப்பதாகவும், அதற்கு சாட்சியாக இருப்பதற்கு என்னையும், எனது உதவியாளரையும் வருமாறு கூறினார். அதன்படி, நாங்கள் கரூர் நகர காவல்நிலையத்திற்கு சென்றோம். அங்கு காலை 7.30 மணிக்கு எங்கள் முன்னிலையில் எதிரி தமிழரசன் என்பவரை போலீசார் விசாரித்தனர். அப்போது அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் ........

அளித்தார். அந்த ஒப்புதல்வாக்குமூலத்தை 1857 காவலர் நளினி என்பவர் கணிணியில் தட்டச்சு செய்தார். அந்த ஒப்புதல்வாக்குமூலத்தை பிரிண்ட் எடுத்து, எதிரி தமிழரசனிடம் கையெழுத்து வாங்கினார்கள். நானும், எனது உதவியாளரும் அதில் சாட்சி கையொப்பம் செய்தோம். பின்னர், அந்த ஒப்புதல்வாக்குமூலத்தின்படி, காவல் ஆய்வாளர், நான், கிராம உதவியாளர், எதிரி ஆகியோருடன் சௌந்திராஜபுரத்திற்கு சென்று, அங்கு எதிரி தமிழரசன் வீட்டிற்கு முன்பிருந்த ஹீரோஹோண்டா சிடி டீலக்ஸ் என்ற வாகனத்தை எதிரி அடையாளம் காட்டி, ஆஜர் செய்தார். அதை காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து, கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், கிராம உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். ஆய்வாளர் கைப்பற்றிய வாகனத்தின் பதிவு எண். TN 38 AE 4282 ஆகும். அந்த இருசக்கர வாகனம் நீதிமன்ற வராண்டாவில் உள்ள ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட சா.பொ.1 ஆகும். எதிரி தமிழரசன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.43. கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.44. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். பின்னர் காவல்துணை கண்காணிப்பாளரும் என்னை விசாரித்தார்.

பின்னர், 03.10.2020 அன்று மீண்டும் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட பிரேம் என்பவரை கைது செய்து வைத்திருப்பதாகவும், அவர் ஒப்புதல்வாக்குமூலம் அளிக்க தயாராக இருப்பதாகவும், அதற்கு சாட்சியாக வருமாறும் காவல்துணை கண்காணிப்பாளர் கேட்டுக்கொண்டார். அதன்பேரில் நானும், எனது உதவியாளரும் கரூர் நகர காவல்நிலையத்திற்கு சென்றோம். அங்கு எதிரிகள் பிரேம்குமார், விமல்பஷீர் ஆகியோர் இருந்தனர். காவல்நிலையத்தில் வைத்து எதிரிகளை எனக்கு அடையாளம் காட்டினார்கள். பின்னர், எதிரி பிரேம்குமார் என்பவர் எங்கள் முன்னிலையில் காவல்துணை கண்காணிப்பாளரிடம் இவ்வழக்கு சம்மந்தமாக ஒப்புதல் .......

வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவலர் நளினி கணிணியில் தட்டச்சு செய்து, பிரிண்ட் எடுத்து கொடுத்தார். அதில் எதிரி பிரேம்குமார் கையெழுத்திட்டார். அதில் நானும், எனது கிராம உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். பின்னர், காவல்நிலையத்திற்கு வெளியிலிருந்த TN 63 AW 6699 என்ற வெர்னாகாரை எதிரி பிரேம்குமார் அடையாளம் காட்ட போலீசார் அதை மகஜரில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், எனது உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.45. இது சம்மந்தமாக காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், அவரது மூத்த வழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராகியுள்ளதால், குறுக்கு விசாரணைக்கு கால அவகாசம் கோரினார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி வழக்கறிஞர் வேறு நீதிமன்றத்தில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கு போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl.Sessions Case No. | : | 11/2023 (Mother case SC.No. 17/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-28** |
| | | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : அங்குராஜ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 25th day of March 2025.

**(எதிரி பிரேம்குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 29.09.2020 அன்று இதே கிராமத்தில், கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்தேன். அப்போது எனது கிராம உதவியாளராக சாட்சி சுரேஷ்குமார் பணிபுரிந்தார். அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு கரூர் நகர காவல் ஆய்வாளர் என்னையும், எனது உதவியாளரையும், கரூர் நகர கா.நி.கு.எண். 1031/2020 வழக்கு சம்மந்தமாக காவல்நிலையத்திற்கு வருமாறு அழைத்தார். நான் வட்டாட்சியருக்கு தகவல் கொடுத்துவிட்டு, நாங்கள் இருவரும் பிற்பகல் சுமார் 6.30 மணியளவில் கரூர் நகர காவல்நிலையத்திற்கு சென்றோம். அங்கு காவல்நிலையத்தில் எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன், பாண்டி (எ) துரைப்பாண்டி, மணி (எ) மணிகண்டன் ஆகியோர் இருந்தனர். பின்னர் 7.30 மணியளவில் எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணனை ஆய்வாளர் விசாரித்தபோது, அவர் ஒரு

ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை மடிக்கணிணியில் தட்டச்சு செய்து, பிரிண்ட் எடுத்து கொடுத்ததை, அதில் நானும், எனது கிராம உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் கையெழுத்து போட்டார். அதில் ஆய்வாளரும் கையெழுத்து போட்டார்.

பின்னர், 9.30 மணியளவில் பாண்டி (எ) துரைப்பாண்டியை ஆய்வாளர் விசாரித்தபோது, அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை மடிக்கணிணியில் தட்டச்சு செய்து, பிரிண்ட் எடுத்து கொடுத்ததை, அதில் நானும், எனது கிராம உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில் எதிரி பாண்டி (எ) துரைப்பாண்டி கையெழுத்து போட்டார். அதில் ஆய்வாளரும் கையெழுத்து போட்டார்.

பின்னர், இரவில் நேரமாகி விட்டதால், மறுநாள் வருமாறு ஆய்வாளர் கூறினார். அதன்படி, 30.09.2020 அன்று காலை 6.00 மணிக்கு நானும், எனது உதவியாளரும் கரூர் நகர காவல்நிலையத்திற்கு சென்றோம். அங்கிருந்த மணி (எ) மணிகண்டனிடம் ஆய்வாளர் விசாரித்து, அவர் அளித்த வாக்குமூலத்தை கணிணியில் தட்டச்சு செய்து, பிரிண்ட் எடுத்ததில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம். எதிரி மணி (எ) மணிகண்டனும் கையொப்பம் செய்தார்.

எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில், எங்களை அழைத்துச்சென்று, கரூர் - அரவக்குறிச்சி சாலையில் உள்ள கொத்தம்பாளையம் பிரிவிற்கு வடக்கே உள்ள வேலமரத்திற்கு அடியில் உள்ள புதரில் இருந்து எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் என்பவர் ஒரு அருவாளை எடுத்து, காலை 9.30 மணிக்கு ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் மகஜர் தயாரித்து கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும், எனது

உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.46. கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.47. ஆய்வாளர் கைப்பற்றிய அருவாள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ள நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.2 ஆகும்.

பின்னர், அதே இடத்தில் 10.15 மணிக்கு எதிரி பாண்டி (எ) துரைப்பாண்டி என்பவர் அதே முட்புதரிலிருந்து எடுத்து ஆஜர் செய்த அருவாளை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம். எதிரி பாண்டி (எ) துரைப்பாண்டி அளித்த ஒப்புதல்வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.48. கைப்பற்றுதல் மகஜல் அ.சா.ஆ.49. ஆய்வாளர் கைப்பற்றிய அருவாள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ள நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.3 ஆகும்.

பின்னர், அங்கிருந்து பள்ளப்பட்டி - பழனி ரோடு சௌந்தராஜபுரம் அங்கன்வாடிக்கு பின்புறம் நிறுத்தி வைத்திருந்த டியூக் என்ற இருசக்கர வாகனத்தை எதிரி மணி (எ) மணிகண்டன் என்பவர் 11.15 மணிக்கு ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம். எதிரி மணி (எ) மணிகண்டன் அளித்த ஒப்புதல்வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.50. கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.51. ஆய்வாளர் கைப்பற்றிய டியூக் இருசக்கர வாகனம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ள நீதிமன்றத்தில்உ ள்ள சா.பொ.4 ஆகும்.

பின்னர், அங்கிருந்து எங்களை அழைத்துக்கொண்டு, பள்ளப்பட்டி - பழனி ரோட்டில் சென்று பாப்பநாயக்கன்பட்டி ரோட்டிற்கு வடக்கே பாறை அருகில் இருந்த முட்புதரில் இருந்து எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன்

என்பவர் ஆஜர் செய்த சட்டை மற்றும் பேண்ட் ஆகியவற்றை பகல் 12.00 மணிக்கு எடுத்து ஆஜர் செய்ததை, ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அதில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.52. ஆய்வாளர் கைப்பற்றிய சட்டை நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.7. பேண்ட் நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.8.

பின்னர், அதே இடத்தில் பாண்டி (எ) துரைப்பாண்டி என்பவர் மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்த பேண்ட் மற்றும் சட்டையை ஆய்வாளர் 12.30 மணிக்கு மகஜர் தயாரித்து கைப்பற்றினார். அந்த மகஜரில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.53. எதிரி ஆஜர் செய்த சட்டை நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.9. பேண்ட் நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.10.

இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், அவரது மூத்த வழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராகியுள்ளதால், குறுக்கு விசாரணைக்கு கால அவகாசம் கோரினார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி வழக்கறிஞர் வேறு நீதிமன்றத்தில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கு போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl.Sessions Case No. | : | 11/2023 (Mother case SC.No. 17/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-29** |
| | | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : முத்துச்சாமி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 25th day of March 2025.

(எதிரி பிரேம்குமார் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் நகர காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 18.09.2020 அன்று அதிகாலை 3.45 மணிக்கு கரூர் நகர காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்தபோது, நிலைய பொறுப்பில் இருந்தபோது, கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை புறக்காவல்நிலையத்திலிருந்து வரப்பெற்ற Intimation No. 5737 ன்படி, கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு நான் சென்று விசாரித்தபோது, பிரேம்குமார், த/பெ.சண்முகம், வையாபுரி நகர், 2 வது கிராஸ், கரூர் என்பவர் சிகிச்சை பெற்றுக்கொள்ள விருப்பமில்லாமல், வெளிநோயாளியாக சென்றுவிட்டதால், நான் 5.30 மணிக்கு நிலையத்திற்கு திரும்பி, பொதுநாட்குறிப்பில் பதிவு செய்தேன்.

பின்னர், பிரேம்குமார் முகவரிக்கு சென்று விசாரித்தபோது, அந்த முகவரியில் அவர் இல்லை என்பதையும் ஆய்வாளரிடம் தெரிவித்தேன்.

இது சம்மந்தமாக காவல்துணை கண்காணிப்பாளர் அவர்கள் 28.12.2020 அன்று முகாம் அலுவலகத்தில் வைத்து என்னை விசாரித்தார்.

மருத்துவமனையிலிருந்து நான் சென்றபோது, மருத்துவரிடமிருந்த விபத்து பதிவேட்டு நகலை பெற்று நான் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

குறுக்கு விசாரணை

எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், அவரது மூத்த வழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராகியுள்ளதால், குறுக்கு விசாரணைக்கு கால அவகாசம் கோரினார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி வழக்கறிஞர் வேறு நீதிமன்றத்தில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கு போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl.Sessions Case No. | : | 11/2023 (Mother case SC.No. 17/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-30** |
| | | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகேசன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1979 of the 25th day of March 2025.

**(எதிரி பிரேம்குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரவக்குறிச்சி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020 ம் வருடம் கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கணிணி இயக்குநராக பணிபுரிந்து வந்தபோது, கரூர் நகர கா.நி.கு.எண். 1031/2020 வழக்கு சம்மந்தமாக கரூர் நகர காவல் ஆய்வாளரிடமிருந்து வந்த தபாலின்படி, காவியாரமேஷ் மற்றும் பிரேம்குமார் ஆகியோரின் அலைப்பேசி எண்களுக்கு அழைப்பு விவர அறிக்கைகள் கேட்டு, சம்மந்தப்பட்ட நோடல் அதிகாரிகளுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளரால் மின்னஞ்சல் அனுப்பப்பட்டது. நோடல் அதிகாரியிடமிருந்து காவல் கண்காணிப்பாளருக்கு வந்த மின்னஞ்சலை, சம்மந்தப்பட்ட காவல் அதிகாரிக்கு அனுப்பி வைத்தேன்.

இது சம்மந்தமாக கரூர் நகர காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், அவரது மூத்த வழக்கறிஞர் வேறு வழக்கில் ஆஜராகியுள்ளதால், குறுக்கு விசாரணைக்கு கால அவகாசம் கோரினார். குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி வழக்கறிஞர் வேறு நீதிமன்றத்தில் ஆஜராவது, வழக்கை ஒத்தி வைப்பதற்கு போதிய காரணம் இல்லை என்பதால், சாட்சி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்